# செம்மண்

நிலம் 3 துகள் 155 வள்ளுவர் ஆண்டு 2052, 08 - 14 ஆடி 2023 வாரமலர் பக்கங்கள் 16


# “அவர் தனது மக்களுக்காகப் போரிட்டுச் சாவடைந்தவர்”

## சிங்களப் படை அதிகாரியின் பதிவு




மொழியாக்கம்
கமலநாதன்


மேஜர் ஜெனரல் நிஸங்க ரணவண என்பவர் இலங்கைப் படைத்துறை அதிகாரியாகப் பயிற்சி பெற்று இலங்கைப் படைப்பிரிவின் 55ஆவது பிரிவில் கடமையாற்றியவர். பின்னர் மேஜர் ஜெனரல் ஆக அதிலிருந்து ஓய்வு பெற்றவர். அப்போதைய யாழ்ப்பாணக் கட்டளைத் தளபதிக்கு அடுத்த நிலை அதிகாரியாக யாழ்ப்பாணத்தில் பணிபுரிந்தவர். 55ஆவது படைப்பிரிவினருடன் யாழ்ப்பாணத்திலிருந்து நந்திக்கடல் வரை நகர்ந்து சென்று இறுதிப்போரின் இறுதி நாள் வரை பணியில் ஈடுபட்டவர். விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் சடலத்தைக் கைப்பற்றியதும் தனது படையணியே என்கிறார் அவர். தனது போர் அனுபவங்களை அவர் நளின் ராஜபக்ச என்ற யூரியூப் தளத்தில் அவர் பதிவு செய்திருந்தார். அதன் முதற்பகுதி கடந்த வாரம் வெளியாகியிருந்தது. அதன் தொடர்ச்சியே இது.

பிரபாகரன் நந்திக்கடல் பகுதியில் பதுங்கியிருப்பார் என்று நான் எதிர்பார்த்திருக்கவில்லை. அவர் மக்களுடன் இருக்கவில்லை என்று மட்டும் படையினருக்குத் தெரிந்திருந்தது. அவர் மக்களுக்குள் இருந்திருந்தால் போர் மேலும் நீடித்திருக்க வாய்ப்பிருந்திருக்கும். மக்களுக்குள் இருந்தால் படையினருக்குத் தாக்குதல்களை மேற்கொள்வதும் சிரமமாக இருந்திருக்கும். மக்கள் சிறிய நிலப்பரப்புக்குள் முடங்கப்பட்ட பின்னர் புலிகள்



எங்களை எதிர்த்துத் தாக்கும்போதுகூட மோட்டார் போன்றவற்றை எம்மால் அடிக்க முடியவில்லை. மக்களுக்கு இழப்பு ஏற்படாத வகையில் நடந்துகொண்டோம். எனினும் புலிகள் இருக்கும் பகுதி நோக்கித் தொடர்ந்தும் முன்னேறினோம்.

பிரபாகரனின் மூத்த மகன் சார்ள்ஸ் அன்ரனி போரில் இறந்தார் என்று அறிந்தேன். அவரது மகள் பற்றி எதுவும் தெரியவில்லை. சிறிய மகன் பிடிபட்டார் என்று அறிந்த போதிலும் நான் அவரைக் காணவில்லை.

பிரபாகரனைச் சடலமாக மீட்டபோது அங்கிருந்த படையினர் மேல் வெடி வைத்து வெற்றியைக் கொண்டாடினார்கள். நான் 1985ஆம் ஆண்டிலிருந்து புலிகளுக்கு எதிராகப் போரில் ஈடுபட்டு வருபவன் என்ற வகையில் பிரபாகரன் இறந்துவிட்டார் என்று அறிந்ததும் ஒரு சாபம் முடிந்தது என்று உணர்ந்தேன்.

எமது அம்மா, அப்பா, பிள்ளைகள் எதிர்பார்த்ததைச் செய்து முடித்த திருப்தி இருந்தது. காலை 10.30 மணியளவில் பிரபாகரனின் உடலத்தை எடுக்கும்போது கடுமையான மழை பெய்தது. அது ஓர் இயற்கையின் ஆசிர்வாதம் என்று நினைத்துக்கொண்டேன். எங்களுக்கு இனி என்ன வேலை இருக்கப்போகிறது என்று படை உயரதிகாரிகள் மட்டத்தில் கதைத்துக்கொண்டோம்.

**மக்கள் பாற்சோறு சாப்பிட்டார்கள்**

போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதைப் பாற்சோறு சாப்பிட்டு மக்கள் மிகவும் சந்தோசமாகக் கொண்டாடினார்கள். ஆனால் களத்தில் நின்ற படையினருக்கு எதுவும் கிடைக்கவில்லை. கொண்டாடும் மன நிலையிலும் இருக்கவில்லை. நாங்கள் மழையிலும் சேற்றிலும் நின்றோம். அடுத்தது என்னவென்று தெரியாமலிருந்தது.

பிரபாகரனின் உடலை நான் பார்த்தபோது தலை சிதைந்த நிலையில் தாடியில்லாது முகம் இருந்தது. ஓரிரு நாள்களுக்கு முன்னர் முகச்சவரம் செய்திருந்தது தெரிந்தது. கண்கள் திறந்த நிலையில் இருந்தன. பிரபாகரனுடன் இறுதியில் ஆயுதம் தாங்கிய மெய்ப்பாதுகாவலர்கள் 20பேர் வரை இருந்திருக்க வாய்ப்புண்டு. இறுதித் தாக்குதலில் பிரபாகரன் உட்பட அனைவரும் கொல்லப்பட்டிருந்தார்கள்.

**பிரபாகரன் பாராட்டப்பட வேண்டியவர்**

பிரபாகரன் தனது மக்களுக்காகப் போரிட்டுச் சாவடைந்தவர் என்ற வகையில் பாராட்டப்பட வேண்டியவர். அவர் பிழையான இலக்கை நோக்கிச் சென்றிருந்தாலும் இறுதி வரை தான் கொண்ட கொள்ளைக்கு விசுவாசமாக இருந்தார். அவர் உண்மையான ஒரு தலைவர் என்பதை யாரும் மறுக்க முடியாது.

பிரபாகரன் மக்களை விட்டுத் தனியாக இருந்ததால் படையினரால் அவரைக் கொல்ல முடிந்தது. மக்கள் தலைவர்களாக இருந்த பலர் பின்னர் மக்களைப் பலவந்தப்படுத்தியதால் மக்களால் தூக்கியெறியப்பட்டனர். அதுதான் ஜே.வி.பிக்கும் நடந்தது. கடாபி, சதாம் உசைன் போன்றவர்களுக்கும் நடந்தது. பிரபாகரனுக்கும் அதுவே நடந்தது.

**புத்தகம் எழுதுவதில் சிக்கல்**

> **தமிழரும் சிங்களவரும் ஒருவரை ஒருவர் மன்னிக்க வேண்டும். சமாதானத்துக்கான ஒரு பொதுத் தூபி கட்டப்பட்டு அதில் தமது பிள்ளைகளைப் போராட்டத்தில் இழந்த தமிழ் அம்மாக்களும் சிங்கள அம்மாக்களும் விளக்கேற்றி வணங்க வேண்டும்.**

சரத்பொன்சேக ஒரு போர் வீரன். மகிந்த ராஜபக்ச அரசியல் வீரன். இந்த இருவருக்கும் இடையில் பின்னர் ஏற்பட்ட முரண்பாடுகள் நிலமையைச் சிக்காலக்கின. அவர்களுக்கு இடையிலான பிரிவை வைத்து ஏனையவர்கள் நன்மை அடைந்தார்கள். இவர்களது பிரிவே பன்னாட்டளவிலும் பிரச்சினை எழுவதற்குக் காரணமாகி

யது. போர் முடிந்ததும் பத்து வருடங்களுக்குத் தேர்தல் இல்லாமல் இவ்விரு தலைவர்களும் நாட்டை நிர்வகித் திருக்க வேண்டும். அவ்வாறு செய்திருந்தால் நாட்டின் முன்னேற்றம் எங்கோ சென்றிருக்கும். போர் நடந்தபோது சகல விடயங்களையும் ஆவணப்படுத்தினோம். அவற்றை வைத்துக் கமால் குணரட்ன, சரத்பொன்சேகா ஆகியோர் புத்தகங்களை எழுதியிருந்தனர்.

நான் ஒரு புத்தகம் எழுதும் திட்டத்தில் உள்ளேன். அதற்கு முன் மனித உரிமைப் பிரச்சினைகள் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும். அந்தப் புத்தகத்தில் 2009க்கு முன்னரும் பின்னரும் என எழுத உள்ளேன். தமிழ் இளை ஞர்கள் தமது தேவைக்குப் போராடினார்கள் என்றாலும் அவர்களது நோக்கம் பிழையானது என்பதால் அதை முறியடிக்கப் படையினர் போராட வேண்டியிருந்தது.

**பொதுத்தூபி அவசியம்**

தமிழரும் சிங்களவரும் ஒருவரை ஒருவர் மன்னிக்க வேண்டும். சமாதானத்துக்கான ஒரு பொதுத் தூபி கட் டப்பட்டு அதில் தமது பிள்ளைகளைப் போராட்டத்தில் இழந்த தமிழ் அம்மாக்களும் சிங்கள அம்மாக்களும் விளக்கேற்றி வணங்க வேண்டும். புலிகளின் அம்மாக்க ளுக்கு அந்தச் சந்தர்ப்பம் கொடுக்கப்பட வேண்டும். இவற்றை அரசியல்வாதிகளால் செய்ய முடியாது. பொது அமைப்புக்களாலேயே செய்ய முடியும். அதற்காகப் பொது அமைப்புக்கள் வலுப்படுத்தப்பட வேண்டும். தமிழ்




அமைப்புகளும் சிங்கள அமைப்புகளும் இணைந்து செயற்பட வேண்டும். அரசியல்வாதிகளின் தேவைகளை நிறைவேற்ற முயன்றால் இந்த நாடு மேலும் பாதிக்கப் படும். எதிர்காலத்தில் கடன் வாங்கிச் சீவிக்க வேண்டிய நிலையே ஏற்படும்.

---

## இந்த வாரச் சொல்

# மட்டுக்கட்டுதல்



யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் மட்டுக்கட்டுதல் என்ற சொல் பேச்சு வழக்கில் பல சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மட்டுக்கட்டுதல் என்பதன் அர்த்தங்களாக, ஊகித்து அறிதல், அடையாளம் காணுதல், தெரிந்து கொள்ளுதல், நிதானித்தல், அனுமானித்தல், உணர்தல். மதிப் பிடுதல், அளவுக்குட்படுத்துதல் ஆகியன பல்வேறு சந்தர்ப்பங்களில் பேசப்படுகின்றன.

"உங்களைக் கண்டு கன காலம் தானே... அதுதான் ஆளை மட்டுக்கட்டேலாமப் போச்சுது"

"இந்தச் சுவர் எத்தினை அடி வரும் என்று சும்மா ஒரு மட்டிலை சொல்லுங்கோ பாப்பம்?"

"வயசு போட்டுதுதானே அதுதான் வாற போற ஆக்களை மட்டுக்கட்டேலாமக் கிடக்கு"

"இந்த மோட்டாச் சைக்கிளின்ர இஞ்சினைப் பிரிச்சு வேலை செய்யிறதுக்கு எவ்வளவு முடியும் என்டு ஒரு மட்டிலை கணக்கச் சொன்னால்தான் காசை ரெடி பண்ணிப்போட்டு வரலாம்"

"பெரிய மனிசியான பிறகு அவளை மட்டுப்பிடிக் கேலாமக் கிடக்கு... ஆளே மாறீட்டாள்"

"கன காலத்துக்குப் பிறகு போனதாலை என்னை ஒருத்தரும் மட்டுக்கட்டேல்லை..."

# களம் நின்ற மனிதர்களின் கதை எங்கே...?

**சத்தியநாதன்**

இறுதிப் போர் முடிந்து 14 ஆண்டுகள் கடந்துவிட்டன. அந்தக் கொடிய போரின் இறுதிக் கட்டத்தில், அந்தக் குறுகிய நிலத்துக்குள் அகப்பட்ட மக்கள் என்னவெல்லாம் அனுபவித்தார்கள்...? அவர்கள் சந்தித்த அவலங்கள் என்ன...? ஒடுக்குமுறைகள் என்ன...? பாதிப்புகள் என்னென்ன...? இவற்றுக்கிடையில் அவர்கள் எவ்வாறு உயிர் தப்பினார்கள்...? அதற்காக எவ்வளவு அல்லல்பட்டார்கள்...? எதையெல்லாம் இழந்தார்கன்...? போன்ற பல்வேறு வாழ்க்கை அனுபவங்களை



அந்த மக்களிடமிருந்து எவரும் பதிவு செய்யவில்லை. இது விடயத்தில் சிங்களத் தரப்பினர் ஆர்வம் காட்டப்போவதில்லை. தமிழ் அரசியல் வாதிகளும் ஆர்வம் காட்டப்போவதில்லை. ஆங்காங்கே ஓரிருவரின் அவலங்கள் வெளிக்கொணரப்பட்டாலும் பாதிக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கான மக்களின் மனங்களில் ஆறா வடுவாகப் போர் ஏற்படுத்திய ரணம் மறைந்தே கிடக்கிறது. புலிகள் ஆயுத முனையில் மக்களைத் தடுத்து வைத்திருந்தார்கள் என்ற செய்தியை மறைப்பதற்காகப் பல

“ ஒன்று விடுதலைப் புலிகளைப் பராட்டி எழுதுவது, மற்றையது புலிகளை மட்டம் தட்டி எழுதுவது. இந்த இருவேறு எழுத்துகளுக்கும் கைநிறையச் சம்பளம் வழங்கும் நிலை காணப்படுகிறது. இவ்விரு தரப்பினருக்கும் புலம்பெயர் தமிழர்களின் பணமே செலவிடப்படுகிறது. அது பணம் வழங்குபவர்கள் எதிர்பார்க்கும் நோக்கத்துக்கு ஏற்ப பதிவு செய்யப்படுகிறது. இவற்றை மையமாக வைத்து இந்த இரு சாராராலும் தமது அரசியலையும் பொருளாதாரத்தையும் முன்னெடுத்துச் செல்ல முடிகிறது. இவ்விரு அணிகளும் புலம்பெயர் நாடுகளில் நேரடியாகவும் சமூக வலைத்தளங்கள் ஊடாகவும் நுள்ளுப் பிராண்டி கிள்ளுப் பிராண்டி விளையாடுகிறார்கள். ”

சம்பவங்களைத் தமிழ்த் தரப்பினரே மறைக்க வேண்டியிருக்கிறது. அதற்காக அங்கு நடந்த ஏனைய அவலங்களையும் மறைப்பது நியாய மானதல்ல. அவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களின் அனுபவங்கள் பதிவு செய்யப்படாததால் அங்கு நடந்த பல சம்பவங்களை அறிந்து அதில் தாமும் நின்றதாக அரசியல்வாதிகளும், வெளிநாடுகளில் தஞ்சமடைய விரும்புவோரும் காட்டிககொள்ளும் பேரவலாம் கடந்த 14 ஆண்டுகளாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இறுதிப் போருக்குள் அகப்பட்டிருந்தவர்கள் எழுதக்கூடிய வல்லமை இல்லாதவர்களாகப் பெரும்பாலும் இருப்பதால் அந்த மக்களைச் செவ்வி கண்டு அதில் இடைச் செருகல்கள் செய்யாது பதிவு செய்வது மிக மிக அவசியம்.

**எடுகோள்களின் ஆதிக்கம்**

இறுதிப் போரை முழுமையாகத் தீர்மானிக்கும் நபராகப் புலிகளின் தலைவர் பிரபாகரன் இருக்கவில்லை என்பது தெரிகிறது. 2009 இல் அவர் முக்கிய நபர்கள் யாரையும் சந்திக்கவில்லை என்றும் தெரிகிறது. அவ்வாறானால் பிரபாகரன் போராட்ட விடயத்தில் என்ன நினைத்திருந்தார், முடிவெடுத்தார் என்பதுகூட யாருக்கும் தெரிந்திருக்கவில்லை. பிரபாகரனிடமிருந்து எதையும் பதிவு செய்ய முடியாத நிலையில், அவர் அப்படி யோசித்திருக்கலாம்... இப்படி யோசித்திருக்கலாம்... என்ற எடுகோள்களே அதிகம் உலா வருகின்றன. அவற்றை வைத்து அவர் சார்பான எவ்வித முடிவுக்கும் வந்துவிட முடியாது. இவ்வாறிருக்கையில், இறுதிப்போர் பற்றி இருவேறு நிலைப்பாடுகள் ஊடகங்களில் பதியப்பட்டு வருகின்றன. அதில் ஒன்று விடுதலைப் புலிகளைப் பராட்டி எழுதுவது, மற்றையது புலிகளை மட்டம் தட்டி எழுதுவது. இந்த இருவேறு எழுத்துகளுக் கும் கைநிறையச் சம்பளம் வழங்கும் நிலை காணப்படுகிறது. இவ்விரு தரப்பினருக்கும் புலம்பெயர் தமிழர்களின் பணமே செலவிடப்படுகிறது. அது பணம் வழங்குபவர்கள் எதிர்பார்க்கும் நோக்கத்துக்கு ஏற்ப பதிவு செய்யப்படுகிறது. இவற்றை மையமாக வைத்து இந்த இரு சாராராலும் தமது அரசியலையும் பொருளாதாரத்தையும் முன்னெடுத்துச் செல்ல முடிகிறது. இவ்விரு அணிகளும் புலம்பெயர் நாடுகளில் நேரடியாகவும் சமூக வலைத்தளங்கள் ஊடாகவும் நுள்ளுப் பிராண்டி கிள்ளுப் பிராண்டி விளையாடுகிறார்கள். இவர்களால் போரில் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை. புலிகள் பற்றிய செய்திகள் வெளிவந்தால் பன்னாட்டு விசாரணைக்குப் பாதிப்பாக அமையும் என்று கூறுவதில் எவவித உண்மையும் இல்லை. இறுதிப் போர் தொடர்பான சட்லைட் படங்களும் ஏனைய ஆவணங்களும் பன்னாட்டு அமைப்புகளிடம் உள்ளன. இதில் மக்களின் கருத்துக்களை வைத்து அவற்றை முறியடிக்க வாய்ப்புண்டு என்று கூறுவது ஏற்புடையதல்ல.



**போரின் பின்பான அணித் தலைவர்கள்**

இறுதிப் போர் வரை போரை வழிநடத்திச் சென்றவர்களும் போர் முடிவுற்றுப் 14 ஆண்டுகளில் வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களுக்கு அரசியல் தலைமை வகித்த தலைவர்களும் நேர் எதிரான போக்குகளை உடையவர்களாக உள்ளனர். போர் முடிந்து 14 ஆண்டு கடந்துள்ள நிலையிலும் பல தமிழ் அரசியல்வாதிகளின் அரசியலுக்குப் பக்கத்துணையாக இருப்பது இறுதிப் போர் நிகழ்வுகளாகவே இருக்கின்றன. சிறையிலுள்ளவர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்கள், ஊனமுற்றவர்கள், வறுமையில் வாடுபவர்கள் எனப் பல பிரிவுகளாகப் போரில் பாதிக்கப்பட்ட மக்களின் நிலை இருக்கிற போதிலும் அதை வைத்து அரசியலுக்கு வந்தவர்கள் பெரும் பணக்காரர்களாக ஆகிப் பாதிக்கப்பட்டவர்களுக்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று கூறுமளவுக்குமே நிலமைகள் உள்ளன.

இவை எல்லாவற்றையும் கடந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதையும் செய்யாது அரசியல் நடத்துபவர்கள் இறுதிப் போர்க் காலத்தில் தாம் களத்தில் நின்றதுபோலவும் மக்களுடன் நின்றதுபோலவும் கூற முனைவதால் இறுதிப் போரின் போது அவலப்பட்ட மக்களின் கதை மறைக்கப்படுகிறது இந்த நிலை மாற்றப்படுவதற்குக் களத்தில் நின்ற உண்மை மனிதர்களின் கதை பாரபட்சமின்றியும் பக்கச்சார்பின்றியும் வெளிக்கொணரப் படவேண்டியது அவசியமாகும். இதுவே இறுதிப் போரின் அவலத்தையும் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்ட வரலாற்றையும் அடுத்த சந்ததிக்குக் கடத்துவதற்கு உதவும்.

# காணி பிடிக்கும் அரச பொறி...!

சத்தியநாதன்



முருகன் ஆலயங்களில் இந்துக்கள் வருடா வருடம் நிகழ்த்தும் சூரன் போரில் முருகனுடன் போரிடுவதற்காகச் சூரன் வருவதற்கு முன்னர் அவனது சகோதரர்கள் வந்து போரிட்டுத் தோற்பதைக் காணலாம். மூன்றாவதும் முடிவுமாகச் சூரன் வந்து முருகனுடன் போரிட்டுத் தோற்பார். சூரர்களின் உடற்பாகம் ஒன்றாக இருக்க அவர்களின் தலைகள் சிங்கம், யானை, சூரன் என அடுத்தடுத்து மாற்றப்பட்டுவதை இந்தச் சூரன் போரில் காணலாம். சூரன் போரில் சூரர்களின் தலைகள் மாற்றப்படுவது போலவே சிங்கள ஆட்சியாளர்களின் காணி பிடிக்கும் செயற்பாடுகளும் இருக்கின்றன. வடக்குக் கிழக்கிலுள்ள காணிகளைக் கையகப்படுத்துவதற்காகச் சூரனின் தலை மாற்றச் செயற்பாட்டைப்போன்ற பல் வேறு வழிமுறைகளைக் கையாண்டு வருகின்றனர். அதில் கணிசமான அளவு வெற்றியும் கண்டுள்ளனர். இதன் அண்மைய செயற்பாடாக வவுனியா வடக்கு நயினாமடுப் பகுதியில் 72ஆயிரம் ஏக்கர் காணியைச் சீனித் தொழிற்சாலை ஒன்றுக்கு ஒதுக்கியமையைக் குறிப்பிட முடியும். முதலீட்டுச் சபை மூலமாக இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்று இதுகுறித்து அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் அறிவித்திருந்தார்.

**நகரங்களில் பிழைப்பு நடத்திய வன வள அலுவலகம்**

2009ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகள் அழிக்கப்படும் வரை வடக்குக் கிழக்கில் வன வள இலாகா நகரங்களில் ஓர் அறையில் தனது அலுவலகத்தை நடத்தி வந்தது. காடுகளதும் விலங்குகளதும் ஒளிப்படங்களை அந்த அலுவலகச் சுவர்களில் மாட்டி வைத்து அதையே காடுகள் என்றும் விலங்குகள் என்றும் நம்பிக்கொண்டிருந்தது. அந்தப் படங்களைப் பார்த்துக் கொண்டிருப் பதற்கு அந்த ஊழியர்களுக்கு அரசு ஊதியமும் கொடுத்தது. காட்டுக்குள் விடுதலைப் புலிகளின் படையணிகள் மாறி மாறிக் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்ததால் ஆயுதம் தாங்கிய படைச் சிப்பாய்கள் கூடப் பயந்த வண்ணமே காடுகளுக்குள் நகரவேண்டியிருந்தது. ஒரு வகையில் பார்த்தால் விடுதலைப் புலிகள் வனத்தைப் பாதுகாத்தார்கள் என்றே சொல்ல முடியும். இயல்பாகவே காடுகள் மீதான நேசம் அவர்களுக்கு இருந்தமை ஒருபுறமிருக்க, விடுதலைப் புலிகள் நிலைகொண்டிருந்த காரணத்தால்கூடப் பல காடுகள் காப்பாற்றப்பட்டன. விடுதலைப் புலிகளால் வனங்களும், கனிய வளங்களும் பாதுகாக்கப்பட்டமை குறித்துப் போர் முடிவுற்ற பின்னர் முன்னாள் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன பாராட்டியிருந்தார். அதேவேளை மகாவலி ஆற்றங்கரையில் மன்னம்பிட்டிப் பகுதியில் அவரது சகோதரர் அப்போது மணல் கொள்ளையில் ஈடுபட்டுப் பெருமளவு பணத்தை உழைத்துக்கொண்டிருந்தார். இதுதான் சிங்கள ஆட்சியாளர்கள், அரச தரப்பினரின் நிலைப்பாடாக இருக்கிறது - இருந்து வருகிறது.

**படையினர் மூலமான கையகப்படுத்தல்கள்**

வடக்குக் கிழக்கில் போர் முடிந்த கையோடு படையினர், காவல்துறையினர், ஏனைய படைகள் என அரசு தனது அடியாட்கள் மூலம் பல இடங்களில் காணிகளைக் கையகப்படுத்தியது. ஏற்கனவே இந்தத் தரப்பினரின் பிடியிலிருந்த காணிகளுடன் புதிய காணி அபகரிப்புகளையும் அரங்கேற்றியது. மக்களின் உறுதிக் காணிகள், தனியார் கட்டடங்கள், மீன்பிடிப்

பாடுகள், விவசாய நிலங்கள், ஆலயங்கள், கைத்தொழில் மையங்கள் எனப் பலவும் இதற்குள் அடங்கியிருந்தன. அவற்றுள் ஒரு சில காணிகள் மக்கள் போராட்டங்களாலும், மனித உரிமை அமைப்புகளின் அழுத்தங்களாலும் பின்னர் விடுவிக்கப்பட்டன. ஆனாலும் காங்கேசன் துறைத் துறைமுகம், பலாலி வானூர்தி நிலையம் ஆகிய கேந்திர முக்கியத்துவம் மிக்க இடங்களின் விரிவாக்கத்துக்காகத் தொடர்ந்தும் பெருமளவு காணிகளைக் கையகப்படுத்தியே வைத்திருக்கிறார்கள்.



**2009ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகள் அழிக்கப்படும் வரை வடக்குக் கிழக்கில் வன வள இலாகா நகரங்களில் ஓர் அறையில் தனது அலுவலகத்தை நடத்தி வந்தது. காடுகளதும் விலங்குகளதும் ஒளிப்படங்களை அந்த அலுவலகச் சுவர்களில் மாட்டி வைத்து அதையே காடுகள் என்றும் விலங்குகள் என்றும் நம்பிக்கொண்டிருந்தது. அந்தப் படங்களைப் பார்த்துக்கொண்டிருப்பதற்கு அந்த ஊழியர்களுக்கு அரசு ஊதியமும் கொடுத்தது.**

**மிருகக்காட்சிச் சாலைக்கு ஆயிரம் ஏக்கர்...!**

வன்னியில் ஆயிரம் ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்திப் பெரிய மிருகக்காட்சிச் சாலை மையம் ஒன்றை நிறுவுவதற்கான ஏற்பாடுகள் பற்றி அரச தரப்பில் பேசப்பட்டது. பின்னர் அது கிடப்பில் போடப்பட்டுவிட்டது. அதேபோல புல்மோட்டையை அண்மித்த பகுதியில் 2ஆயிரம் ஏக்கர் நிலம் தேவை எனக்கூறப்பட்டுப் பின்னர் 200 ஏக்கர் நிலம் போதும் எனப் படத்தைப் புதுப்பித்துக்கொண்டார் அரசதலைவர் ரணில் விக்கிரமசிங்க.

**சவூதி அரேபியாவுக்கு ஆயிரம் ஏக்கர்...!**

சவூதி அரேபியாவுக்கு வழங்குவதற்கு ஆயிரம் ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது என்று தெரிவித்து நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தலைமையிலான ஒரு குழுவினர் வவுனியாவை அண்மித்த பகுதியில் இதற்கான நிலத்தைப் பார்வையிட்டனர் என்று அண்மையில் ஒரு செய்தி வெளியாகியிருந்தது. இது குறித்த பிற்பட்ட தகவல்கள் எவையும் பின்னர் கிடைக்கவில்லை.

**தொல்லியல் திணைக்களம் எனும் பெரும் பொறி**

மக்களின் காணிகளை நினைத்த மாத்திரத்தில் கைப்பற்றுவதற்குத் தொல்லியல் திணைக்களம் அரசின் செல்லப் பிள்ளையாக இருந்து வருகிறது. கட்டுமாணப் பணிக்காகக் கிடங்கு வெட்டும்போது தனிநபர்களின் காணிகளில்கூடத் தொல்லியல் அடையாளங்கள் எனச் சந்தேகிக்கப்படும் அளவுக்கு எவையாவது தென்பட்டால் தொல்லியல் திணைக்களத்தைப் பயன்படுத்தி அந்தக் காணிகளை அரசுடமையாக்க முடியும். இவ்வாறாகத் தொல்லியல் திணைக்களத்தைப் பயன்படுத்திக் காணிகளைக் கையகப்படுத்துவது மாத்திரமல்லாமல் அவற்றைத் தமது இன, மத உரிமை நிலங்களாகவும் அரசு மாற்றிவருகிறது.

**தொல்லியலுடன் கைகோர்த்த வன வளம்**

அரசுக்குக் காணி பிடித்துக் கொடுக்கும் தொல்லியல் திணைக்களத்துடன் இப்போது வன வளத் திணைக்களமும் இணைந்திருப்பதுதான் இப்போதைய பெரும் சோகம். நயினாமடுப் பகுதியில் சீனித்தொழிற்சாலை அமைப்பதற்கும் கரும்பு உற்பத்தி செய்வதற்கான நிலங்களை வழங்குவதற்குமாகத் தனக்குச் சொந்தமான காணிகளை வன வளத் திணைக்களமானது அரசுக்குக் கைமாற்றியிருக்கிறது. வன வளத்திணைக்களத்துக்குச் சொந்தமான காணியைச் சீனித் தொழிற்சாலை அமைப்பதற்கு அரசுக்கு வழங்குவதற்கு வனவளத் திணைக்களம் அனுமதித்திருக்கிறது என்று கூறப்படுகிறது. இது உண்மை என்றால் வன வளத் திணைக்களத்தின் பணிதான் என்ன? என்ற கேள்வி எழுகிறது. அதாவது வனங்களைப் பாதுகாப்பதற்கு நேர் எதிராகத் தொழிற்சாலைக்காக வனத்தை அழிக்கக் கொடுக்கும் செயற்பாட்டைச் செய்யத் தொடங்கியிருக்கிறது என்றே தெரிகிறது. தற்போது இருக்கின்ற வனப்பகுதியை அழித்தே சீனித் தொழிற்சாலையை நிறுவ வேண்டியிருப்பதால் வன வளத் திணைக்களம் தற்போது வன அழிப்புத் திணைக்களமாக மாறியிருப்பதாவே கொள்ளமுடியும். இவ்வாறாக இந்து ஆலயங்களில் நடக்கும் சூரனின் தலை மாற்றத்தைப்போலதான் அடுத்தடுத்து ஆட்சிக்கு வரும் சிங்கள ஆட்சியாளர்களும், அரசியல்வாதிகளும் வடக்குக் கிழக்கில் தமிழர்களின் காணிகளைக் கையகப்படுத்துவதில் கவனம் செலுத்தி வருகின்றனர். தலையை மாற்றி மாற்றிச் சூரர்கள் களமிறங்குவதுபோல பல்வேறு வழிமுறைகள் ஊடாகக் கையகப்படுத்துகின்றனர். சூரன் போரில் சூரன் தோற்கடிக்கப்பட்டாலும் காணிகளைக் கையகப்படுத்தும் விடயத்தில் அரசு என்கிற சூரன் வென்றதாகவே இருக்கிறது. அரச சூரனுக்குச் சார்பான தமிழர்களும் உருவாகி வருவது இந்தச் சூரனின் வெற்றிக்கு வித்திடுவதாக அமைகிறது.



01

அருண்பாக்யா

# மிக நுட்பமாகக் கட்டமைக்கப்பட்ட யாழ்ப்பாணத்துச் சாதியம்

இன்றுவரை சாதி, சாதியம் பற்றிய நடைமுறையைப் பற்றிப் பிடித்திருக்கும் பிரதேசங்களில் யாழ்ப்பாணமும் உள்ளடங்கும். யாழ்ப்பாணச் சாதிய விடயத்தில் பாவிக்கப்படுகின்ற ஒரு சங்கேதச் சொல் 'மற்றப்பாட்டி' என்பது. இந்தச் சொல்லை வைத்துச் சாதி வேறுபாட்டைச் சுட்டிக்கொள்கிறார்கள். உயர்சாதியினர் எனக் கருதப்படுபவர்கள் தமக்குள் உரையாடும்போது மற்றப்பாட்டி என்று தாழ்ந்தவர்கள் என்று கருதப்படும் மக்களைச் சுட்டிக்காட்டுகின்றனர். தாழ்ந்த சாதிக்காரர் எனக் கருதப்படுபவர்கள் தமக்குள் உரையாடும்போது உயர்ந்த சாதிக்காரர்கள் எனக் கருதப்படுபவர்களை மற்றப்பாட்டி என்கிறார்கள். பல ஊர்களில் ஒருவரின் பெயரைக் கூறும்போது சாதியை முதலில் கூறி அதன் பின்னர் அவரது பெயரைக் கூறும் வழக்கமும் உண்டு,

தாழ்த்தப்பட்ட அல்லது சாதி ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்கள் என்று வரையறுக்கப்பட்டுள்ள மக்கள் ஒன்றாக இருக்குமிடத்தில் உயர் சாதிக்காரர் ஒருவர் நுழைந்தால் சாதி ரீதியாகக் கதைக்கும் விடயத்தில் மற்றவர்கள் கவனமாக இருப்பதற்காக 'மற்றப்பாட்டி வருகுது...' என்று கூறுவதால் அவர் எங்கடை ஆளில்லை என்ற செய்தியை அறிவிக்கின்றனர். இதுவே உயர் சாதியினர் என்று வரையறுக்கப்பட்டவர்கள் கூடியிருக்கும் இடத்திலும் நடக்கிறது.

இவ்வாறு சாதியைக் கடைப்பிடிக்கும் அனைவரும் சாதி விடயத்தில் மற்றப்பாட்டி என்ற சொல்லைப் பயன்படுத்துவதால் இந்தச் சொல்லில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இந்தத் தொடரின் நோக்கம் சாதி விடயம் எவ்வாறு நுட்பமாக வடிவமைக்கப்பட்டு பேணப்பட்டு வருகிறது, அதைத் தொடர்ந்தும் பேணுவதில் அக்கறை காட்டுபவர்கள் யார்? என்பதைச் சமூகத்தில் கையாளப்படுகின்ற விடயங்களைச் சுட்டிக்காட்டி வெளிக்கட்டுவதாகும்.

**நிலம் சார்ந்த சாதியம்**

மேட்டுக்குடியினர் என்று சொல்லப்படுகிற சாதியில் உயர்ந்தவர்களாகக் கருதப்படும் வேளாளர்கள் என்போர் தம்மை உயர்த்தியும் ஏனையவர்களைத் தாழ்த்தியும் காட்டுவதற்காகப் பல நுட்பமான வழிமுறைகளைக் கையாண்டு வருவதைப் பல சம்பவங்களில் இருந்து கண்டுகொள்ள முடியும். இந்த மேட்டுக்குடியினர் யாழ்ப்பாணக் குடாநாட்டில் சிறந்த விளைநிலங்கள், மழை காலத்தில் நீர் தேங்காத உயர் தரைகள் போன்றவற்றைத் தமக்குரியவையாக மாற்றிக் கொண்டனர். அவர்களால் ஒடுக்கப்பட்ட மக்களை இது பிரமிப்புடன் அண்ணாந்து பார்க்க வைத்த ஓர் உளவியல் சித்தாந்தமாக இருந்தது. காணிகளைச் சொந்தமாக்கியதிலிருந்து மேட்டுக்குடியினரின் சகல நடவடிக்கைகளிலும் சாதிப் பாகுபாடு குறித்த ஏதோ ஓர் உள்நோக்கம் இருந்தே வருகிறது. யாழ் குடாநாட்டைப் பொறுத்தவரை ஓர் ஊரின் நில அமைப்பை வைத்து அந்த இடத்தில் வாழ்கின்ற மக்கள் எந்தச்

**பெண்ணிய விடுதலை, சாதிய அடக்குமுறை, சமூக ஏற்றத் தாழ்வுகள், மூடத்தனங்கள், புதிய கருத்துருவாக்கம் என எழுத்துத் துறையிலும் சிந்தனைப் பாய்ச்சலிலும் கொடி கட்டிப் பறக்கும் எழுத்தாளர்கள், கலைஞர்கள், படைப்பாளிகள் கூட தமது, பிள்ளைகளினது, உறவுகளினது திருமணம் என்று வரும்போது சாதியப் பிடிக்குள் குறுகிப் போய்விடுவதைக் காணலாம்.**

சாதியினர் என்று இலகுவில் கண்டறிய முடியும். கலட்டி, தரிசு நிலங்கள், வெள்ளம் ஓடுகின்ற ஓடைகள் என்கிற புவியியல் அமைப்பின் அடிப் படையில் இதை இலகுவாக அடையாளம் கண்டுவிட முடி யும். வண்ணான் குளம், நள வோடை, பள்ளோடை, குறிச்சி ஆகிய பல சொற்களை வைத் துத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மேட்டுக்குடியினர் ஒதுக்கிய நிலங்கள் எனக் கண்டுபிடித்து விட முடியும்.

**சாதி வலை**

யாழ்ப்பாணக் குடநாட்டில் ஆரம்பத்தில் மேட்டுக்குடியி னரின் தொகை அதிகமாக இருந்தது. கோவிற் காணிகள், பொதுக்காணிகள் என்ற அடிப்படையில் அவர்கள் அதிக காணிகளைக் கையகப்படுத்தி வைத்திருந்தார்கள். ஒவ்வொரு ஊர்களிலும் ஒவ்வொரு வேளாளக் குடி பிரரபல்யமாக இருந்தது. இந்தக் குடிகளைச் சேர்ந்தவர்க ளுக்கிடையில் சொத்துக்களைப் பரிமாறிக் கொள்வது, கொள்ளல் - கொடுத்தல்கள் மட்டுப்படுத்தப்பட்டன. இதற்குச் சீதானம் என்கிற விடயமும் வலுச்சேர்த்தது. பெண்ணிய விடுதலை, சாதிய அடக்குமுறை, சமூக ஏற்றத் தாழ்வுகள், மூடத்தனங்கள், புதிய கருத்துருவாக்கம் என எழுத்துத் துறையிலும் சிந்தனைப் பாய்ச்சலிலும்



கொடி கட்டிப் பறக்கும் எழுத்தாளர்கள், கலைஞர்கள், படைப்பாளிகள் கூட தமது, பிள்ளைகளினது, உறவுகளி னது திருமணம் என்று வரும்போது சாதியப் பிடிக்குள் குறுகிப் போய்விடுவதைக் காணலாம்.

**அரச நிர்வாகத்துடனான உறவு பேணல்**

கல்வியில் தேர்ச்சி கண்டிருந்த மேட்டுக்குடியினர் பலர் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் ஒல்லாந்தரின் நிர் வாக நடைமுறையில் பணியாற்றிய நபர்களாக இருந்த னர். தமது கல்வி காரணமாக வரி அறவிடுபவர்களாகவும் ஒல்லாந்தருக்கு எதிரான கிளர்ச்சிகளில் ஈடுபடும் உள்ளூர் வாசிகளைக் காட்டிக் கொடுப்பவர்களாகவும் இருந்தனர். உள்ளூர்வாசிகளுக்குக் கல்வி புறக்கணிக்கப் பட்டது. உள்ளூர் வாசிகளைத் தண்டிப்பது போன்ற பல விடயங்களில் ஒல்லாந்தர்களுடன் சேர்ந்து இவர்கள் செயற்பட்டதால் ஒல்லாந்தரிடம் ஊதியம், சன்மானங்க ளைப் பெற்றனர். உள்ளூர்வாசிகளை ஏமாற்றிச் சொத் துக்களைப் பெற்றுத் தம்மை வலுப்படுத்திக் கொண்டார்கள். இந்தச் சந்தர்ப்பம் மேட் டுக்குடியினர் அனைவருக்கும் கிடைத்த தல்ல. ஒரு சில குடும்பங்களுக்கு மாத்தி ரமே இந்த வாய்ப்புகள் கிட்டின.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பனை ஓலை அல்லது கிடுகுகளால் வேயப்பட்ட வீடு களே ஆரம்பத்தில் அதிகமிருந்தன. அந்த வீடுகளில் சுவாமி அறை, படுக்கை அறை, பெரிய அறை, சின்ன அறை என்று எதுவு மிருக்கவில்லை. வேளாளரில் ஒரு பிரிவி னர் ஒல்லாந்தரின் ஆட்சிக்காலத்தில் மலே சியரவுக்குத் தொழில் நிமித்தம் சென்று பணம் சம்பாதித்து அந்தப் பணத்தைக் கொண்டு சுண்ணாம்புக் கல் வீடுகளைக் கட்டினார்கள். அதன் தொடர்ச்சியாகப் பிரித் தானியர் ஆட்சிக்காலத்தில் சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளுக்கு அதிகம் பேர் தொழிலுக்காகச் சென்றனர். அப்போது இலங்கை, சிங்கப்பூர், மலேசியா எல்லாமும் பிரித்தானியரின் காலணித்துவ ஆட்சிக்குள் இருந்ததால் இந்த மூன்று நாடுகளிலும் ஒரு நாட்டிலிருந்து இன்னோர் நாட்டுக்குத் தமக்குத் தேவையான ஊழியர்களைக் கப்பலில் ஏற்றியிறக்கினார்கள். ஆட்சித்தரப்பினருடன் ஒட்டி உறவாடிய மேட்டுக்குடியினர் இதனால் நாடுகாண் வணிகத்திலும் பணமீட்டியதால் உள்ளூரில் தம்மை மேலும் உயர்த்தினர். (தொடரும்)

# ஏன்...?

நட்சத்திரா

# அப்படி...?

## இரவில் பொருள் வாங்குவதும் கொடுப்பதும் கூடாது...?

56



இரவாகிவிட்டால் வீட்டிலிருக்கும் பொருள்களைக் கைமாறாகவோ, கடனாகவோ, உதவியாகவோ, விலைக்கோ கூடக் கேட்டு வருபவர்களுக்குக் கொடுக்காது தவிர்க்கும் நடைமுறை நம்மூர்களில் பலர் மத்தியில் இருப்பதைக் காணலாம். அதற்குக் காரணம் தான் என்ன...? ஏன் இரவில் பொருள் வாங்குவதையும் கொடுப்பதையும் நம்மவர்கள் தவிர்த்து வருகிறார்கள்....? இதன் பின்னணி தான் என்ன...?

குறிப்பாக உப்பு, முட்டை, எண்ணை வகைகள் ஆகியவற்றைக் கேட்டு இரவில் அயல்வீட்டுக்காரரிடம் சென்றால், 'இருட்டி விட்டது நாளைக்கு வாருங்கள்' அல்லது 'விளக்கு வைச்சாச்சு நாளைக்கு வாருங்கள்' என்பர். கிராமங்கள் பலவற்றில் இன்றும் இந்த நடைமுறையைக் காணலாம். இதற்கான காரணம் இருளாகவே இருக்க முடியும். இருட்டாகி விட்டதால் நிறத்திலும், தோற்றத்திலும் அடையாளம் காண முடியாத பொருள்களைப் பரிமாறிக்கொள்ளக் கூடாது என்றும் அவ்வாறு பரிமாறும்போது ஏற்படும் தவறுகளால் பல பின் விளைவுகளைச் சந்திக்க நேரும் என்பதாலேயுமே இரவில் பொருள்களைக் கைமாற்றுவதைத் தவிர்த்தார்கள். விளக்கு வைச்சாச்சுது என்று கூறுவதும் இரவாகி விட்டது என்ற உள்ளார்ந்தத்திலேயே ஆகும். இதுவே பின்னர் சமய, மதக் கடைப்பிடிப்பாகவும் பல கட்டுக் கதைகளுக்கும் வழி வகுத்தது. உதாரணமாக இரவில் முட்டையைப் பரிமாறிக்கொள்ளும் பழக்கம் தவிர்க்கப்பட்;டது. முட்டைக்கு உயிருண்டு எனவே அதை இரவில் பரிமாறிக்கொள்ளக்கூடாது என்றும் விளக்கம் கூறப்பட்டது. ஆனால், பகலில் அதே உயிருள்ள முட்டையைப் பரிமாறிக்கொண்டார்கள். இரவில் பரிமாறாது தவிர்த்தார்கள்.

**உப்பு, முட்டை, எண்ணை வகைகள் ஆகியவற்றைக் கேட்டு இரவில் அயல்வீட்டுக்காரரிடம் சென்றால், 'இருட்டி விட்டது நாளைக்கு வாருங்கள்' அல்லது 'விளக்கு வைச்சாச்சு நாளைக்கு வாருங்கள்' என்பர். கிராமங்கள் பலவற்றில் இன்றும் இந்த நடைமுறையைக் காணலாம். இதற்கான காரணம் இருளாகவே இருக்க முடியும்**

இருட்டில் ஒரு பொருளை வாங்கும்போது அதன்



**கதிரேசன் காத்தவராயன்**

# பிளானிங் எண்டுறது இதுதானோ?

ஆண்டைக்கதிலை அராலியிலை முத்தண்ணையை ஒருக்காச் சந்திக்க வெண்டு வெளிக்கிட முருகேசரும் தானும் வாறனெண்டு வந்தார். என்ரை மோட்டச் சயிக்கிளிலை வெளிக்கிட்டம். சங்கானைக்குள்ளை போகேக்கை பின்னாலை இருந்த முருகேசர் 'என்னப்பா கதிரேசண்ணை ஏதோ விழுந்த மாதிரிக்கிடக்கு?' எண்டு குழறினார். 'இந்த றோட்டிலை ஒண்டும் விழ யில்லை எண்டாத்தான் புதினம்' எண்டு நான் சொல்லிச் சிரிச்சுக்கொண்டு சங்கத்தடியாலை திரும்பி வட்டுக்கோட்டை றோட்டிலை ஏறி அராலிக்குப் போகத்திரும்பிப்போனம்.

அதிலை பெரிய பள்ளிக்கூடத்தடியிலை விலத்தேலாமல் ஒரே சனக் கூட்டம். அதிலை நிப்பாட்டி என்னவெண்டு விசாரிச்சம். 'கோட்டமட்டத் திலை போட்டி நடக்கப்போகுது... பிள்ளையளும் அதுகளைக் கொண்டு வந்தபெற்றாரும் வாத்திமாரும்...அதுதான் சனம்' எண்டொராள் விளங்கப்படுத்திச்சுது. 'போட்டியளிலை பிள்ளையள் வலு ஆர்வமாத்தான் நிக்குதுகள்...அதைவிடப் பெற்றார்... என்ன கதிரேசண்ணை?' எண்டு கேட்டார் முருகேசர். அஅதக்குள்ளைஏதோ ஒரு மர்மம் கிடந்தமாதிரித்தான் கிடந்தது.

'என்னப்பா ரண்டு பேரும்? நீங்கள் போட்டியிலை பங்குபற்றுறியளோ?' எண்ட குரலைக் கேட்டுத் திரும்பினால் சங்கரப்பிள்ளையர் நிண்டார். 'ஓஓஓ...சீசீய்...உவ்வளவு சனத்துக்கையோ?' எண்டு முருகேசர் கேட்டுச் சிரிச்சார். 'என்னப்பா சங்கரப்பிள்ளையண்ணை இதிலை?' எண்டு கேட் டன். சிரிச்சுப்போட்டு 'அதோ...நான் பென்சனுக்குப் பிறகு ஸ்கூல் சேவிஸ் ரியூசன் சேவிஸ் எண்டல்லே செய்யிறன்...பேரப்பிள்ளையள் பாடு நான்தானே?' எண்டு பிலத்தாச் சிரிச்சார்.

'அதுசரியண்ணை இவ்வளவு சனமும் பிள்ளையளும் ஏனண்ணை இப்பிடி நிக்குதுகள்... உள்ளுக்கை போயிருக்கலாமல்லோ?'எண்டு கேட் டன். 'அதையேனப்பா கேக்கிறியள்... ஒரு மணிக்குச் சரியாய் போட்டியள் தொடங்கிவிடும்.. நீங்கள் பன்ரண்டேமுக்காலுக்காவது நிக்கவேணும்

கனம் பார்த்து வாங்க முடி யாது. சிலவேளை அந்தப் பொரு ளைப் போட்டுத் தரும் பையில் துவாரங்கள் இருந்தால் இரவில் அவை தெளிவாகத் தெரிய வாய்ப்பில்லை. கொண்டு செல் லும்போது கொட்டுப்படுவதும் சிந்துப்படுவதும்கூடத் தெரியாது. எனவேதான் இரவில் பொருள் பரிமாற்றத்தைத் தவிர்த்தார்கள்.

எண்ணை, தேன், மருந்து போன்றவற்றை வாங்கும்போது தவறி விழுந்து சேதமாவதற்கும் இரவில் நிறம் தெளிவில்லாமல் இருப்பதால் பொருளை மாறிக் கொடுத்துவிடவும் அதைச் சரி யாகப் பார்த்து வாங்கவும் இருள் தடையாக இருக்கும் என்பதால் இருட்டுப் பட்டு விட்டது, 'இனிப் போய்க் கேளாதே' என்றும் விளக் கம் கூறாது பொருள் வாங்குவ தைத் தவிர்த்தனர்.

ஒரு முக்கியமான பொருளை இருட்டில் வாங்கிச் செல்லும்போது அதை வேறு யாரும் தட்டிப் பறித் துச் செல்லவும் சேதம் ஆக்கவும் வாய்ப்பு இருப்பதாலும் இருட்டில் பொருள் வாங்குவது தவிர்க்கப் பட்டது.

தாள் நாணயங்களையோ தங்கத்தையோ வாங்கும்போது கூட போலியானவை, பழுதானவற் றைக் கொடுத்து ஏமாற்றிவிடவும் இரவில் வாய்ப்புண்டு. குறிப்பாக இருட்டுப்பட்டால் முட்டை கொடுக்கக்கூடாது என்பதற்குக் காரணம் முட்டை கைதவறி விழுந்து விட்டால் சேதமாகிவிடும் என்பதாலாகும். இத்தகைய விட யங்கள் மினசாரம் இல்லாத காலத்தில் இருட்டைக் காரணம் காட்டித் தவிர்க்கப்பட்டன. அதில் நியாயமும் உண்டு. ஆனால், இன்றும்கூடப் பலர் அதை ஒரு வழமையாகவும் வழக்காறாகவும் சமயக் காரணங்களும் கூறித் தவிர்த்து வருகின்றனர்.

தற்போது நள்ளிரவிலும் வங்கி யில் பணம் எடுக்கவும், வைப்புச் செய்யவும் முடிகிறது. முட்டை, எண்ணை ஆகிய பொருள்களைக் கூட 24மணிநேரமும் திறந்திருக் கும் அங்காடிக் கடைகளில் வாங்க முடிகிறது. இத்தகைய காலத்தில் இருட்டைக் காரணம் காட்டிப் பொருள் பரிமாற்றத்தைத் தவிர்ப்பது மூடத்தனமாகவே இருக்க முடியும்.

எண்டு பள்ளிக்கூடத்திலை சொன்னவை... நாங்களும் வந்திட்டம்...வாத்திமாரும் வந்திட்டினம்... நடத்திறவையைத்தான் காணேல்லை...' எண்டு புலம்பினார் சங்கரப்பிள்ளையர். 'சரியப்பா இப்ப ஒண்டரையாகுதல்லே? யாழ்ப்பாணத்தாற்றை நேரமெண்டதுக்கு இன்னும் கிடக்குதல்லே?' எண்டு சொல்லிக்கொண்டு முத்தண்ணையிட்டை வெளிக்கிட்டுப் போனம்.

அங்கை முத்தண்ணை மாட்டுக்குத் தண்ணி காட்டப்போட்டாரெண்டு எங்களை இருக்கச் சொல்ல இருந்து கதைச்சுக்கொண்டிருந்தம். அவரும் வர அவரோடையும் கதைச்சதிலை நேரம் போனதே தெரியேல்லை...'ஐஞ்சு மணியாச்சப்பா...நீங்களும் போகவல்லே வேணும்' எண்டு முத்தர்தான் மனமில்லாமல் துரத்தினார். வெளிக்கிட்டு வந்தால் போட்டி நடக்கிறபள்ளிக் கூடத்தடிக் கலவரம் ஓயேல்லை... 'நிப்பாட்டண்ணை புதினம் பாப்பம்' எண்டு முருகேசர் சொல்ல நிப்பாட்டிப்போட்டு படலைக்குள்ளை போனம்.

எங்களைக் கண்டிட்டாக்கும் சுதனின்ரை கூட்டாளி வாத்திப் பெடியன் பாதி வெளியாலைவந்த சேட்டோடை வந்தான். 'என்ன ஐயாவை... இஞ்சாலை திடீரெண்டு...' எண்டு கேட்டான். குரலிலையும் ஒரு களைப்புத்தெரிஞ்சுது. 'சனமாய்க் கிடந்துது...எங்கடை கூட்டாளியும் ஒராள் பேரப்பிள்ளையளோடை வந்து நிண்டவர் பாப்பமெண்டுதான்தம்பி வாறம்' எண்ட நான் சொல்லப் பரிதாபமாய்ச் சிரிச்சான்.

'என்ன தம்பி ஒரு மணிக்கெண்டு அறிவிச்சனீங்களாம்... ஒண்டரைக்கும் ஒரு ஏற்பாடுமில்லாமல் நிண்டவை... இப்ப என்ன முடிவுக்கு வந்திட்டுதோ?' எண்டு முருகேசர் கேட்டார். அவன் வாத்திப்பெடி அசடு வழிஞ்சான். பிறகு ' அதய்யா.. ஒரு ஏற்பாடும் இல்லை... ஒண்டரைக்குத்தான் பள்ளிக்கூடம் இடம்குடுத்ததாம்... அதுக்குப் பிறகுதான் நடத்திறதுக்கு ஆள் தேடினவை...அதுக்குப் பிறகுதான் இடம் தேடினவை...இப்பிடியிப்பிடி ஒவ்வொண்டையும் தேடிச்சிரிஞ்சதிலை ரண்டுமணியாப் போச்சுது.... அதுக்கைபெற்றார் கதைக்கிறகதையளைக் கேக்கிறது வலு கஸ்ரமாப்போச்சுது...' எண்டு மூச்சுவாங்க நிப்பாட்டினான்.

'தம்பி என்ன போட்டியப்பு நடந்தது... மொழியையும் அவங்கடை பழக்கவழக்கத்தையும் கொண்டாடுறனாங்கள் அவங்கட நேரமுகாமைத்துவத்தையும் திட்டமிடலையும் விட்டிடுறம்...எது தேவையோ அதையும் கவனிக்கிறேல்லை...இவ்வளவு வாத்திமார்.. பெற்றார் பிள்ளையளின்ரை நேரத்தையும் உப்பிடிச் சின்னப்பிள்ளைத்தனமாய் துலைக்கலாமோ?' எண்டு கொதிச்சார் முருகேசர்.

'இஞ்சார் முருகேசர்...இதுதானே எல்லா இடமும் உள்ள பிரச்சனை...பிளானிங்கிலை நாங்கள் சரியான மட்டையள்தான் எண்டிறதை ஏற்றுக்கொள்ளுற வரைக்கும் மாற்றமொண்டும் நடவாது...தம்பி நாங்கள் நடக்கட்டுமே?' எண்டுகொண்டு வந்திட்டம்.

# மீட்டலி...

**18**

துன்பானந்த சுவாமி



நான் யார்? எனக்கு என்ன தேவை? எனது மனம் எப்படியானது? அது என்ன நிலையிலிருக்கிறது? போன்ற விடயங்களில் இருக்கவேண்டிய எமது கவனம் திசை மாற்றப்பட்டிருக்கிறது. நாம் எம்மீது கவனம் செலுத்தமுடியாத நிலையில் இருக்கிறோம் என்பதே உண்மை. நாம் உணவு உடலுழைப்பு மூலமான சிறந்த பயிற்சி என அவற்றை மட்டுமா தவறவிடகிறோம். உடைகள் சார்ந்தும் தவறிழைத்தே வருகிறோம். அது என்ன உடைகள் என்று புதிதாகவிருக்கிறதே என்று யோசிக்கிறீர்களா? உடைகள் பற்றிப் பேசவும் ஏராளமாக விடயங்கள் உள்ளன.

உடை என்பது என்ன? உடலை மூடியிருந்து பாதுகாக்கும் தோல் என்கிற இயற்கையான கவசத்திற்கு மேலதிகமாக உடலைப் பாதுகாப்பதற்காக நாம் உடலை பகுதியாகவோ முழுமையாகவோ மறைப்பதற்கானதே ஆடை அல்லது உடை. இப்போது உடை என்பது அந்தஸ்த்தை வெளிப்படுத்தும் ஒரு சாதனமாகி விட்டிருக்கிறது. உடை ஒரு மனிதக் கூட்டத்திற்கான அடையாளமாக ஒரு காலத்தில் இருந்திரக்கிறது என்பதும் உண்மையே.

அது என்ன மனிதக் கூட்டத்திற்கான அடையாளம்? வாழும் சூழல் கொண்டிருக்கும் காலநிலை பிரதேசம் சார்ந்திருக்கும் மூலப்பொருள் என இருந்த ஆடையினது வகை பின்னர் மதம் மற்றும் கலாசாரத்தோடும் சார்ந்திருந்தது. வெப்பம் குளிர் ஈரலிப்பு வெயில் காற்று என காலநிலை தன்செல்வாக்கைக் கொண்டிருந்தது. குறித்த காலநிலைக்கூறினது தாக்கத்திலிருந்து தப்பிப்பதற்காக தோலிற்கு மேலதிகமாக ஒரு கவசம் தேவைப்பட்டது. அதுவே ஆடையானது.

காலமாற்றம் குறித்த ஒரு காலநிலைத் தொகுதியினது ஒரே தன்மை மற்றும் வடிவம் ஆகியவற்றில் மாற்றங்களைப்

# சாரதிகளின் கொலைவெறி....?

வசந்தா




பளை - முல்லையடியைச் சேர்ந்த ராஜபாஸ்கரன் ஜதுர்சிகன் என்ற 13வயது மாணவன் வீதி ஓரத்தில் நின்றபோது (எதிரில் அவரது உறவினரான பெண் ஒருவர் பார்த்திருக்க) வேகமாக வந்த ட்ரக் ரக வாகனம் ஒன்றால் மோதப்பட்டான். அந்த மாண வனை மோதித் தள்ளிவிட்டு நிறுத்தாமல் ஓடித்தப்பியது அந்த வாகனம். இதைச் சாரதிகளின் கொலைவெறித் தாக்குதல்களில் முதலாவது என்றோ இறுதியானது என்றோ கூறிவிட முடியாத அளவுக்கு இலங்கையின் சட்டம் பலவீனமாக இருக்கிறது. அதுவே சாரதிகளின் மனநிலையில் உற்சாகத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இத்தகைய கொலைவெறித் தாக்குதல்களை மேற்கொண்ட சார திகள் யாரும் தூக்கிலிடப்படவோ தண்டிக்கப்படவோ இல்லை என்பதற்கு அப்பால் அவர்களது சாரதி அனுமதிப்பத்திரம்கூடத் படிப்படியாக மாற்றங்களைச் செய்திருக்கிறது. மனி தனது பயணங்கள் வழியான தொடர்புகளது செல் வாக்கும் கணிசமான மாற்றங்களுக்குக் காரணமாக இருந்திருக்கிறது. அதனைவிட சமூகங்களில் தொழில் பாகுபாட்டின்வழி உருவாகிய சமூகப் பிரிவுகள் காலநிலை சார்ந்து ஒரே குழுவாக இருந்தபோதும் ஆடைகளில் மாற்றங்களைச் செய்திருக்கின்றன. ஆனால் ஆடைகளது மூலப்பொருட்களில் மாற்றங் கள் நிகழவில்லை.

ஆடைகளது வரலாற்றைப் பேசுவதல்ல இவ் விடத்தினது நோக்கம். மாற்றமுற்றிருக்கிற ஆடை மாற்றம் எமது இயல்பைஎவ்வாறு மாற்றங்களுக்கு உள்ளாக்கியிருக்கிறது என்பதே. எமது வெப்ப வலயங்களில் வெயிலினது சூட்டையும் வியர்வை யையும் கவனத்தில் கொண்டதாகவே இருந்திருக் கிறது. அனேகமாக மென்நிறங்களையுடைய பருத் தியாடைகள் பயன்பாட்டிலிருந்திருக்கின்றன. உடல் பாதுகாப்பாகவும் ஆரோக்கியமாகவும் இருந்திருக் கிறது. உடல் ஆரோக்கியம் என்பது மனதினது ஆரோக்கியத்தைப் பாதுகாத்திருக்கிறது.

எமது பிரதேசங்களில் உடலினது அளவை விட வும் சற்றுப் பெரிதான அளவுகொண்ட ஆடைகளால் ஆடைக்கும் உடலிற்கும் இடையே காற்றோட்டத் திற்கு வழிவிடப்பட்டிருந்தது. அது பாதுகாப்பு என் பதற்கப்பால் உடலிற்கு இதமாகவும் அதனால் ஆரோக்கியமாகவும் இருந்தது. இது அன்று. இன்று? தலைகீழான மாற்றங்களை எமது எமது ஆடைகள் கொண்டுள்ளன.

வெப்பத்தைத் திருப்பியனுப்புகிற, வெப்பத்தை உறுஞ்சாத, வியர்வையை உறுஞ்சாத துணிகளாலான ஆடைகளையே இன்று அணிகிறோம். அதுவே நாகரீகமாகிவிட்டது. குளிர் நாடுகளிலுள்ளோர் பயன்படுத்தும் ஆடைகளே நாகரிக ஆடைகளாகி விட்டன. குளிருக்கடக்கடமாக கழுத்துப் பகுதியைப் பாதுகாக்க அவர்கள் கழுத்துப்பட்டி அணிவது பாதுகாப்புக்கருதியது. ஆனால் வியர்த்துக்கொட்டும் எமது பிரதேசங்களில் நாகரிகம் கருதியதாக கட்டா யமாக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறோ உடலோடு இறுக்கமான முழு ஆடைகள் பணியக ஆடை களாக்கப்பட்டு விட்டன.

உடைப் பழக்கமென்பது நோக்கம் தவறிய தாகவே பயிலப்பட்டு வழக்கமாக்கப்பட்டு விட்டிருக் கிறது. சூழலின் இயல்புக்குப் எந்தவிதத்திலும் பொருத்தமற்ற ஆடைகளால் உடலாரோக்கியம் பெரிதும் பாதிப்புக்குள்ளாகிறது. அதன் விளைவாக மனம் அதிகளவு பாதிக்கப்படுகிறது. நாம் பல வித மான துன்பங்களுக்கும் உள்ளாகிவருகிறது. ஆனால் காரணங்களை அறிந்துகொள்வதில் எமது ஆறாம் அறிவைப் பயன்படுத்தத் தவறிவிடுகிறோம் என் பதே உண்மையானது.

ஆடைகளது மாறுதல் என்பது கலாசார அடை யாளங்களைச் சிதைக்கிறது என்பதும் ஒரு குற்றச் சாட்டாகவே இருந்துவருகிறது. கலாசராரம் சிதைகி றது பண்பாடு தொலைகிறது என்றெல்லாம் புலம்பு வோர் ஆடைகளால் மட்டுந்தான் கலாசாரம் தொலை கிறது என்று கூறுவதில் உண்மை இல்லாமலில்லை. அதனைவிட எமது பண்பாடு சிதைவுறும் செயற் பாடுகள் இருப்பதையும் பேச வேண்டும். பேசுகி றார்களா? நாம் தொடர்ந்தும் பேசுவோம்.

திரும்பப் பெறப்படவில்லை என்ற நிலையே காணப்படுகிறது.

**தினமும் 30பேர் சாவு**

இலங்கையின் அண்மைய தகவல்களின்படி தினமும் 30 தொடக்கம் 35பேர் வாகன விபத்து, நீரில் மூழ்குவது, துப்பாக்கிச் சூடு, கூரிய ஆயுதங்களால் தாக்குதலுக்குள்ளாவது, நஞ்சருந்துவது, தூக்கிடுவது, மின்சாரம் தாக்குவது, போதைப் பொருள் போன்றவற்றைப் பாவிப்பது ஆகிய காரணங்களால் இறக்கின்றனர். இதில் வாகன விபத்துக்களே முதலிடம் பெறுகின்றன.

பளையில் வாகன விபத்தில் இறந்த ஜதுர்சிகளின் தாயாரான கோமதி கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களத்தில் கணக்காளராகக் கடமையாற்றுபவர். அவருக்கு ஜதுர்சிகள் ஒரே ஒரு பிள்ளை. அவரது பூதவுடலுக்கு அருகில் பிரமை பிடித்தவராகக் காணப்பட்டார் தாய். இனி அவரது முகத்தில் சிரிப்பு வர வாய்ப்பேயில்லை. தான் தொட்டுத் தொட்டு வளர்த்த பிள்ளைக்கு இப்படியாகிவிட்டது என்று தேம்பித் தேம்பி அழுதார். அவருடைய பிள்ளையை ஒரு நொடியில் அடித்துக்கொன்றுவிட்ட நிலையில் இனி என்ன வாழ்க்கை என்ற ஏக்கமே எஞ்சியிருக்கிறது.

"மிகவும் கெட்டிக்காரப் பையனான ஜதுர்சிகன் புலமைப் பரிசில் பரீட்சையில் 178 புள்ளிகளைப் பெற்றவன். மிகவும் தங்கமான பிள்ளை. அவன் எதிர்காலத்தில் படித்து மிகமுக்கிய பதவி ஒன்றுக்கு வந்திருப்பான். அவனது படிப்புக்குத் தேவையான பொருளாதார வளம் அவனது பெற்றோரிடம் இருக்கிறது. ஒன்றும் அறியாத பாலகனுக்கு இப்படி நடந்துவிட்டது என்பதை எந்த வகையிலும் சகிக்க முடியாதுள்ளது - என்றார் ஜதுர்சிகனின் உறவுக்காரர் ஒருவர்.

**யாரிந்தச் சாரதிகள்...?**

இத்தகைய வேக ஓட்டச் சாரதிகளில் பலர் பெரிய இடத்து வாகனங்களை ஓட்டுபவர்கள். தமக்கு ஏதாவது நடந்தால் அதை வெட்டியாடும் வல்லமை தமது எஜமானுக்கு இருப்பதாலேயே பல சாரதிகள் துணிந்து அடாவடித்தனத்தில் ஈடுபடுகின்றனர். காவல்துறை விசாரணை நீதிமன்ற விசாரணைகளில் இருந்து எஜமானர்கள் தமிழ்ப்படத் தாதாப் பாணியில் இந்தச் சாரதிகளை மீட்டு வருகின்றனர். இந்தப் பெரிய இடத்து உரிமையாளர்களில் பலர் அரசியல்வாதிகள், பெருவர்த்தகர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், சட்டத்தரணிகள், ஒப்பந்தகாரர்கள் எனப் பல துறை சார்ந்தவர்களாகக் காணப்படுகிறார்கள். இவர்களின் நோக்கம் குறுக்கு வழியில் விரைவாகப் பணம் சேகரிப்பது மட்டுமே.

**இறந்தவரின் தலையில் தவறைக் கட்டிவிடுவது**

விபத்துகள் நடந்ததும் அது சம்பந்தமான விசாரணைகள் நடக்கும்போது விபத்தில் இறந்தவரின் தவறுதான் இறப்புக்குக் காரணம் என முடித்துவிடுகின்றனர். இறந்தவர் இனி வந்து சாட்சி சொல்லப்போவதில்லை என்ற அசையாத நம்பிக்கையும் தங்களின் செயற்பாடுகளுக்கு எதிராகப் பாதிக்கப்பட்ட குடும்பம் எதையும் செய்துவிடப்போவதில்லை என்பதுமே குற்றம் புரிந்தவருக்கு இருக்க்கூடிய பலமாகும். இதுவரை நடந்த விபத்துகள் எதிலும் சாரதிகள் தண்டிக்கப்பட்டதாக இல்லை. ஒரே சாரதி மீண்டும் மீண்டும் மக்களைக் கொலை செய்கிறபோதும் அவர்களின் சாரதி அனுமதிப் பத்திரம் கூட திரும்பப் பெறப்படவில்லை என்பதும் மிகவும் குரூரமான யதார்த்தமாக உள்ளது.

இவ்வாறு நீதிமன்றத்தால் தன்டனை பெறாது தப்பிய பல சாரதிகளை பாதிக்கப்பட்ட மக்கள் பின்னர் கொன்றிருக்கின்றனர். தமது அன்புக்குரியவர்களைக் கொன்றவர்கள் தண்டிக்கப்படவில்லை என்ற கோபத்திலேயே பின்னர் மக்கள் சட்டத்தைத் தமது கைகளில் எடுக்கின்றனர்.

**வீதியில் நடமாட முடியாத நிலை**

தற்போதுள்ள அதிகரித்த வாகனங்களினதும் தரமற்ற சாரதிகளினதும் செயற்பாடுகளால் இனிவரும் காலத்தில் வீதியில் நடந்து செல்வது, சைக்கிளில் பயணிப்பது என்பன சாத்தியமற்றதாகியிருக்கின்றன. வீதி ஓரத்தில் நின்றவர்களையே அடித்து வீசும் சாரதிகள் அதிகரித்துள்ளனர். பெற்றோர் தமது பிள்ளைகள் மீது எவ்வளவு அக்கறையாக இருந்தாலும் இந்த விதி மீறிய சாரதிகளின் அட்டகாசங்கள் இடம்பெறவே செய்கின்றன. சில சந்தர்ப்பங்களில் பெற்றோரும் பிள்ளைகளும் கொல்லப்பட்டதும் நடந்துள்ளன.

வாகனத்தை வேகமாகச் செலுத்திச் செல்லும்போது சாரதிகள் கைபேசியில் உரையாடுவது, போதை பாவனையுடன் காணப்படுவது, சட்டவிரோதப் பொருள்களைக் கடத்துவது என எதிலாவது ஈடுபட்டிருப்பார்கள். அத்தோடு வாகனங்களை உரியவாறு கவனிப்பதுமில்லை. இத்தகைய பொறுப்பின்மைகளும் பல விபத்துக்களை ஏற்படுத்தியுள்ளன.


**டிப்பர், ரரக்ரர், கன்ரர், எரிபொருள் பவுசர்கள், லொறிகள் எனக் கனரக வாகனங்கள் பல மதுபான சாலைகளுக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். மதுபானத்தை வாங்குவதற்காகச் சாரதிகள் வரிசையில் நிற்பர்.**

**மதுபான சாலைகளில் தரிப்பு**

டிப்பர், ரரக்ரர், கன்ரர், எரிபொருள் பவுசர்கள், லொறிகள் எனக் கனரக வாகனங்கள் பல மதுபான சாலைகளுக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். மதுபானத்தை வாங்குவதற்காகச் சாரதிகள் வரிசையில் நிற்பர். அதில் சாராயம் பியர் ஆகியவற்றை வாங்கி வைப்பதையோ அவர் குடித்திருக்கிறாரா இல்லையா என்பதையோ யாரும் பரீட்சிப்பதில்லை. அந்த இடத்திலிருந்து புறப்பட்டுச் செல்லும் வாகனங்கள் தாம் செல்லவேண்டிய இடத்துக்குச் சென்று சேரும்வரை பல அசம்பாவிதங்களை நிகழ்த்துகின்றன. இதற்கு இறுக்கமான சட்;டம் அவசியம். வீதி ஒழுங்கை மீறி ஓடுகின்ற வாகனங்கள் தொடர்பிலும் இடம்பெற்ற விபத்துகள் தொடர்பிலும் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் விபத்தில் இறந்துபோனவர்களே தவறானவர்கள் என்கிற வழமை நீடிக்கவே செய்யும். இந்த நிலை மாற்றப்படவேண்டியது மிக மிக அவசியமாகும்.

**கதை**

இந்தியாவின் சேலம் மாவட்டத்திலுள்ள காசிபுரம் எனும் பிரதேசத்தின் சட்டமன்ற உறுப்பினர் மாமன்னன் (வடிவேல்). அவரது மகன் அதிவீரன் (உதயநிதி ) தற்காப்புக் கலை பயிற்சிப் பாடசாலை ஒன்றை நடத்துகிறார். மாமன்னன் சார்ந்த கட்சியின் மாவட்டச் செயலர் ரத்னவேலு (பஹத் பாசில்), பெரும்பான்மைச் சாதியைச் சேர்ந்த இவர் அதிகார உணர் வுடன் வலம்வருகிறார். அதிவீரனின் கல்லூரித் தோழி லீலா (கீர்த்தி சுரேஷ்), நண்பர்களுடன் இணைந்து அதிவீரன் இடத்தில் இலவசக் கல்வி வகுப்புகளை நடத்துகிறார். பயிற்சி நிலையம் நடத்தும் ரத்னவேலுவின் அண்ணன் (சுனில் ரெட்டி), லீலாவின் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போட, இரு தரப்புக்குமான மோதல், வன்முறை வடிவம் எடுக்கிறது. இதனால் மாமன்னனையும் அதிவீரனையும் சமரசம் பேச அழைக்கிறார் ரத்னவேலு. அங்கே ரத்னவேலுவுக்கும் அதிவீரனுக்கும் வெடிக்கும் மோதல் உட்கட்சிப் பிரச்சினையாக மாறுகிறது. இதனால் ஆளும் கட்சியிலிருந்து விலகி எதிர்க்கட்சியில் சேரும் ரத்னவேலு, தேர்தலில் மாமன்னனை வீழ்த்துவதற்கு முடிவெடுக்கிறார். அதை மீறி மாமன்னன் வென்றாரா? ரத்னவேலு -



# மாமன்னன்

## பரவாயில்லை பார்க்கலாம்



அதிவீரன் மோதல் என்ன ஆனது? எனபது மீதிக் கதை.

**பலம் - பலவீனம்**

சமூக நீதியின் பெயரால் தொடங்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்குள் நிலவும் சாதி ஏற்ற தாழ்வுகளையும் வாக்குகளைச் சுவீகரிக்கும் அரசியல் சமரசங்களையும் தோலுரித்துக் காண் பித்திருக்கிறார் இயக்குநர் மாரி செல்வராஜ். ஒடுக்குமுறைக்கு உள்ளாவோரும் சில நேரம் பதில் தாக்குதலில் இறங்க வேண்டியிருப்பதைப் பதிவு செய்திருந்தாலும் படத்தில் வன்முறை பெருமைப்படுத்தப்படவில்லை.

அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ள வாய்ப்பு களைப் பயன்படுத்தி நிதானமான அணுகு முறையுடன் ஜனநாயக வழியில் பயணிப்பதே ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கு வழி வகுக்கும் என்பதை அழுத்தமாகப் பதிவு செய்திருப்பது பாராட்டுக்குரியது. அதோடு ஆதிக்க சமூகத்திலும் சமத்துவ சிந்தனையுடன் பலர் இருக்கிறார்கள் என்பதைப் பதிவு செய்திருப்பதும் வரவேற்கத்தக்கது.

**சமூக நீதியின் பெயரால் தொடங்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்குள் நிலவும் சாதி ஏற்றதாழ்வுகளையும் வாக்குகளைச் சுவீகரிக்கும் அரசியல் சமரசங்களையும் தோலுரித்துக் காண்பித்திருக்கிறார் இயக்குநர் மாரி செல்வராஜ். ஒடுக்குமுறைக்கு உள்ளாவோரும் சில நேரம் பதில் தாக்குதலில் இறங்க வேண்டியிருப்பதைப் பதிவு செய்திருந்தாலும் படத்தில் வன்முறை பெருமைப்படுத்தப்படவில்லை**

படத்தின் முதல் பாதியில், கோயில் குளத்தில் குளித் துக்கொண்டிருக்கும் சிறுவர்கள் கற்களால் அடித்துக் கொல்லப்படும் காட்சி பதைபதைப்பை ஏற்படுத்துகிறது. அதை எதிர்த்து மாமன்னன் வெகுண்டெழுவதும் அரசி யல் கணக்குகளைக் காரணம் காட்டி, சொந்தக் கட்சிக் காரர்களால் அடக்கிவைக்கப்படுவதும் சமூக யதார்த் தத்தைப் பிரதிபலிக்கின்றன. ரத்னவேலு வீட்டில் நிகழும்



இடைவேளைக் காட்சியானது நாயகத்தனம் மிக்க படத் துக்கான உச்சங்களுடன் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த உணர்வெழுச்சித் தருணங்களை உள்ளடக்கியது. ஆதிக்கவாதியாக வலம் வரும் சில அரசியல்வாதிகள் சுயநலத்துக்காகவும் அதிகாரத்துக்காகவும் பிறர் காலில் விழக் கூடத் தயங்காதவர்கள் என்பதைச் சொல்லும் இரண்டாம் பாதிக் காட்சியும் முக்கியமானது. இறுதிக் காட்சியில் சட்டப்பேரவையில் மாமன்னன் 'பிறப்பொக் கும் எல்லா உயிர்க்கும்' என்னும் திருக்குறளைச் சொல் லும்போது ஏற்படும் நெகிழ்ச்சி கவனிக்கத்தக்கது.

இதுபோன்ற சில தருணங்கள் ரசிக்க வைத்தாலும் ஒட்டு மொத்த திரைக்கதை, பலவீனமாக உள்ளது. பல காட்சி கள் மெதுவாக நகர்கின்றன. தேர்தல் பரப்புரை தொடர் பான காட்சிகள் பல திரைப்படங்களில் பார்த்துச் சலித் தவை. இதனால் பதட்டத்தை ஏற்படுத்த வேண்டிய ரத்ன வேலுகதாபாத்திரம், ஒரு கட்டத்துக்கு மேல் பரிதாபத்துக் குரியதாகி விடுகிறது.

அதிவீரன் பேசும்பல அரசியல் வசனங்கள் முக்கிய மானவை என்றாலும் அவற்றை அனைத்துப் பார்வையா ளர்களும் உள்வாங்கும் அளவுக்கு அதிவீரன் கதாபாத்தி ரத்தின் பின்னணி வலுவாகநிறுவப்படவில்லை. திருப்பி அடிக்கத் துடிக்கும் அதிவீரனுக்கும் பொறுமையைக் கடைப்பிடிக்கும் மாமன்னனுக்கும் இடையிலான முரண் களையும் அவற்றைத் தாண்டிய பிணைப்பையும் இன் னும் சிறப்பாகக் காட்சிப்படுத்தியிருக்கலாம்.

**பாத்திரங்கள்**

அப்பாவின் உரிமைக்காக ஆவேசம் கொள்ளும் மக னாக யதார்த்தமான நடிப்பை வழங்கியிருக்கிறார் உதய நிதி ஸ்டாலின். படத்தின் தலைப்புக்குரிய நாயகனான வடிவேலு நடிப்பில் முற்றிலும் வேறோரு பரிமாணத்தைச் சிறப்பாக வெளிப்படுத்தியிருக்கிறார். குறிப்பாக அரசி யல் சமரசத்துக்கு அடிபணிந்து தனியாகச் சென்று அழும் காட்சியில் பார்வையாளர்களை உறைந்துபோக வைக்கி றார். பஹத் பாசில் வழக்கம்போல் கதாபாத்திரமாகவே உருமாறியிருக்கிறார். லால், கீதா கைலாசம், கீர்த்தி சுரேஷ் கிடைத்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்தியிருக் கிறார்கள். ஏ.ஆர்.ரஹ்மானின் பின்னணி இசை காட்சிக ளின் உணர்வுகளைக் கச்சிதமாகக் கடத்தினாலும் பாடல் கள் பெரிதாக ஈர்க்கவில்லை. தேனி ஈஸ்வரின் ஒளிப் பதிவு, கதையையும் கதைக் களத்தையும் உயிர்ப்புடன் பதிவு செய்திருக்கிறது.

திரைக்கதையில் சில குறைகள் இருந்தாலும் ஜனநாயக வழியில் அர்ப்பணிப்புடன் போரிட்டால் சமூக ஏற்றத் தாழ்வுகளிலிருந்து விடுபட்டு மேம்பட முடியும் என்னும் நம்பிக்கையை விதைத்ததற்காக 'மாமன்ன'னை வரவேற் கலாம்.

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.07.2023 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781